(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

13.11.2019. **STC.No**. 137/2018 **Name**: **Sundarraj PW**1

<u>மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

*புகாரில் சொல்லப்பட்டுள்ள விலாசமானது நான் குடியிருக்கும் வீட்டின் விலாசம் என்றால் சரிதான். அது வாடகை வீடாகும். மேற்சொன்ன விலாசத்தில் கடந்த 6 வருடங்களாக குடியிருந்துவருகிறேன். என்னுடைய சொந்த ஊர் பெருந்துறை ஜோதிபாளையம் ஆகும். நான் எங்குவேலைசெய்கிறேன் என்றால் விவசாயம் செய்துவருகிறேன். இடம் வாங்கி விற்கும் வேலையும் நகைகடையிலும் வேலை செய்துவருகிறேன். எந்த நகை கடையில் வேலை செய்கிறேன் என்றால் பெருந்துறை ஈ.ஆர் நகை கடையில் வேலைசெய்துவருகிறேன். அங்கு முழு நேர வேலை செய்கிறேனா என்றால் சில சமயம் முழுநேரமும் சிலசமயம் பகுதிநேரமும் வேைல செய்கிறேன். என்னுடைய மாத சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.25,000/– அதை ரொக்கமாக தருகிறார்களா அல்லது காசோலையாக தருகிறார்களா என்றால் ரொக்கமாக தருகிறார்கள். அது போக நான் வட்டி தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் வாங்கக்கூடிய சம்பளத்தின் விவரமானது நான் வேலை செய்யும் நகை கடையின் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் முழுமையாக கணக்கில் வராது. அவ்வாறு கூறுவது என்ன அர்த்தம் என்றால் கணக்கு காண்பிப்பதற்கு மட்டும் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுக்கப்படும். கணக்கு காட்டக்கூடியதாக நான் பெறும் மாதம் வருமானம் என்ன என்றால் ரூ.9,000/–ஆகும். என்னுடைய மாத வருமானமே ரு.9,000/– தான் என்றும் வழக்கிற்காக ரூ.25 ஆயிரம் சம்பளம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால்*

சரியல்ல. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 குழந்தைகள் . முதல் மகள் 10 ஆம் வகுப்பும் 2–வது மகள் 6 ஆம் வகுப்பும் படித்துவருகிறார்கள். எனக்கு எவ்வளவு விவசாய பூமி உள்ளதென்றால் 1 ஏக்கர் பூமி உள்ளது. மேற்சொன்ன பூமியில் எனக்கு சொல்லக்கூடிய அளவிற்கு வருமானம் இல்லாததால் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் கரூர் வைசியா வங்கியில் உள்ளது. அது சேமிப்பு கணக்கு ஆகும். எத்தனை வருடங்களாக மேற்படி வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் நான் பள்ளிப்படிப்பு படிக்கும் காலத்திலிருந்தே வைத்துள்ளேன். 30.10.2017 தேதியில் என்னுடைய வங்கியின் இருப்பு தொகை எவ்வளவு என்றால் பார்த்தால்தான் சொல்ல இயலும். என்னுடைய வங்கிகணக்கின் கணக்கு விவரங்கள் என்னால் தாக்கல் செய்யமுடியும் என்றால் சரிதான். ஆஜர் எதிரி எனக்கு எவ்வளவு வருடமாக பழக்கம் என்றால் சுமார் 20 முதல் 25 ஆண்டுகளாக பழக்கம். எவ்வகையில் எனக்கு பழக்கம் என்றால் நான் பணிபுரியும் நகை கடைக்கு வருவதால் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. ஆனால் எங்கள் இருவருக்கும் இடையில் பணபரிவர்த்தனை இல்லை என்றால் சுமார் 15 வருடங்களாக பரிவர்த்தனை உண்டு சுமார் 50,000/– அல்லது ரூ.1,00,000/– கடன் வாங்குவது வழக்கம் அதை திருப்பி கொடுத்தும் விடுவார். அதற்கு ஆதரமாக நான் ஏதேனும் வாங்குவேனா என்றால் இல்லை. திருப்பி செலுத்தும் பொழுது எவ்வாறு கொடுப்பார் என்றால் ரொக்கமாகத்தான் கொடுப்பார். மேற்படி பணப்பரிவர்த்தனையை நான் குறித்துவைத்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் கடன் வாங்குவதற்கு எப்பொழுது என்னிடம் கடன் கேட்டார் என்றால் சுமார் 1 வாரத்திற்கு முன்னர் கடன் கேட்டார். அந்த விவரத்தை என்னுடைய அறிவிப்பிலோ, புகாரிலோ, அல்லது முதல் விசாரணையிலோ குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கடன் கொடுத்ததாக

சொல்லப்படும் தொகை ரூ.13,00,000/—த்தை வங்கியிலிருந்து கொடுத்தேனா என்றால் இல்லை வீட்டிலிருந்து கொடுத்தேன். அந்த கடனை ரொக்கமாகவா அல்லது காசோலையாக கொடுத்தேனா என்று நான் என்னுடைய அறிவிப்பிலோ, புகாரிலோ, அல்லது முதல் விசாரணையிலோ குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். எங்குவைத்து எதிரி கடன் வாங்கினார் என்ற விவரத்தை அறிவிப்பிலோ, புகாரிலோ, அல்லது முதல் விசாரணையிலோ குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் எதிரி கொடுத்ததாக சொல்லும் காசோலைக்குரிய வங்கிகணக்கு செயல்பாட்டில் இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் எத்தனை நபர்கள் என்னுடன் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை. பொதுவாக கடன் தொகைக்கு பாதுகாப்பிற்காக கடனுறுதிச்சீட்டு அல்லது அடமானப்பத்திரம் எழுவது வழக்கம் என்றால் சரிதான். நான் கடன் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் அதை கொடுத்ததற்காக எந்த ஆதாரமும் இல்லையென்றால் காசோலை மட்டும் வாங்கியுள்ளேன். மற்ற எந்த ஆதாரமும் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் காசோலையில் தேதி , கையெழுத்து மற்றும் விவரங்கள் வெவ்வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வேறுபாடு குறித்த விவரங்களை எனது அறிவிப்பிலோ, புகாரிலோ, அல்லது முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி காசோலையை யார் பூர்த்திசெய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது கையொப்பம் மட்டும் என் முன்னிலையில் இட்டார்கள். கடன் கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.13,00,000/— எவ்வாறு ஈட்டப்பட்டது என்றால் ரியல் எஸ்டேட் தொழில் மூலம் ஈட்டப்பட்டதாகும். கடைசியாக நான் யாருக்கு விற்றோ அல்லது வாங்கியோ பெற்ற வருமானம் என்று குறிப்பிட்டு சொல்ல முடியும் என்றால் சரிதான். அதற்குரிய சாட்சிகளை விசாரிக்க நான் தயாராக உள்ளேனா

என்றால் சாட்சிகளை விசாரிக்கபோவதில்லை ஆனால் ஆதாரங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் என்னுடைய வருங்காலத்தில் வரும் விசாரணையில் என்னுடைய வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

எதிரி தரப்பு வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.